IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, FAST TRACK COURT, ERANIEL

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 526/2019 P.W. 4/L.W.4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஸ்ரீ கலா | **Taluk** | : | |
| **Father's Name** | : | க/பெ. முரளிதரன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 21.07.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியும். அவர்கள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். அ.சா.1–யை எனக்குத் தெரியும். அவர் அ.சா.2–ன் தந்தையாவார். 10.12.2014ம் தேதி காலை 08.45 மணியளவில் வில்சன் மற்றும் அவரது அப்பா, அம்மா சேர்ந்து கங்கா என்பவரை கம்பால் அடித்தார்கள். நான் சத்தம் கேட்டு போய் பார்த்தேன். அப்பொழுது கங்கா அடிபட்டிருந்தார். கங்காவின் பெற்றோர்கள் கங்காவை அழைத்துக் கொண்டு காரில் தக்கலை மருத்துவமனைக்குச் சென்றார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. கங்கா என்பவரின் வீட்டிலிருந்து எங்களது வீட்டிற்கு 1கி.மீ தூரம் இருக்குமா என்றால், எனது வீட்டிற்கு பின்னால் அவர் வீடு உள்ளது. சம்பவ நேரத்தில் நான் அந்த வீட்டில் வசித்து வரவில்லை என்றால், இல்லை. வசித்து வந்தேன். நான் சத்தம் கேட்டு எல்லா நபர்களும் சம்பவயிடத்திற்கு போனதும் தான் அங்கு வந்தேன் என்றால், சரிதான்.

2. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், அ,சா.2 கங்கா எனக்கு தெரிந்த நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் முதல் விசாரணை சாட்சியத்தில் கூறியதை தான் போலிஸ்

விசாரணையில் கூறினேன் என்றால், சரிதான். கங்காவும் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களும் என்ன பேசிக் கொண்டிருந்தார்கள் என்று எனக்குத் தெரியுமா என்றால், தெரியாது. போலிசார் என்னை எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால், போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

3. நான் சொல்லும் நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்பதாலும், அ.சா.2 கங்கா எனக்கு தெரிந்த நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.